

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (10.9.2025) சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற "காவலர் நாள் விழா 2025" – இல், காவலர் நாள் விழாவை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிபெற்ற காவலர் குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கி, சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில், காவல் துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) க.வெங்கடராமன், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ.அருண் உள்ளிட்ட காவல்துறை உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில்

# அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

### காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது!

காஞ்சிபுரம், செப். 11-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (9.9.2025) காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் துணை முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களான மகளிர் விடியல் பயணத் திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண், தமிழ்புதல்வன், முதல்வரின் முகவரி, மக்களுடன் முதல்வர், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், கலைஞர் கனவு இல்லம், மக்களைத் தேடி மருத்துவம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், குடிநீர் திட்டப் பணிகள், சாலை மேம்பாட்டுப் பணிகள் உள்ளிட்ட அனைத்து துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,

ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த மாவட்டத்தில் நடைபெறுகின்ற அரசு திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தை நாம் நடத்தியிருக்கின்றோம். நம்முடைய அரசு அமைந்த பிறகு இந்த நான்கரை ஆண்டுகளில் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல்வேறு புதிய நலத்திட்டங்களை தந்திருக்கின்றார்கள். அந்த திட்டப்பணிகளின் பணி முன்னேற்றம் குறித்து இன்றைக்கு நாம் விவாதித்திருக்கின்றோம். அதேபோல் இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு முன் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரமுகர்களுடன் நான் சந்தித்து உரையாடிவிட்டு தான் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கின்றேன்.

அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவது, சுற்றுலா மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். அதுதவிர, நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், பொறுப்பு அமைச்சர், மக்கள் பிரதிநிதிகளுடன் கோரிக்கைகளை பெற்று, அவற்றையும் ஆய்வு செய்த பிறகே இந்த கூட்டத்திற்கு வருகை தந்துள்ளேன்.

சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் 6 மாதங்களே உள்ள நிலையில், முக்கியமான திட்டங்க ளின் தற்போதைய நிலை குறித்து மட்டுமே இன்றைக்கு நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். அனைத்து திட்டங்களையும் காலம் தாழ்த்தாமல் திட்டத்திற்கான குறிப்பிட்ட காலவரையரைக்குள் முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அரசு, முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு திட்டங்களை தீட்டினாலும், அவற்றை மக்களிடத்தில் கொண்டு சென்று மக்கள் பயனடைய வேண்டும் என்றால் வந்திருக்கக்கூடிய அரசு அலுவலர்கள் நீங்கள் தான் முக்கிய பங்காற்றி இருக்கின்றீர்கள். எனவே, இத்திட்டங்களை தாமதமின்றி செயல்படுத்தி, இந்த அரசுக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நற்பெயரை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம் என்று துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் மரு. ச. உமா, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், மாநகராட்சி மேயர் திருமதி.எம்.மகாலட்சுமி யுவராஜ் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கந்தசாமி நாயுடு கல்லூரி தமிழ்த்துறை (மாலை நேரம்) நடத்தும்

# மகாகவி பாரதியின் 104வது ஆண்டு நினைவேந்தல்!

### முனைவர் வா.மு.சே.முத்துராமலிங்கம் ஆண்டவர் தலைமை! ஞானராஜசேகரன் சிறப்புரை!

சென்னை, செப். 11-

சென்னை கந்தசாமி நாயுடு கல்லூரி தமிழ்த்துறை (மாலை நேரம்) நடத்தும் மகாகவி பாரதியின் 104வது ஆண்டு நினைவேந்தல் மற்றும் பரிசளிப்பு விழா இன்று (11.09.2025 - வியாழன்) மாலை 4 மணியளவில் கல்லூரிக் கலையரங்கில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வுக்கு கல்லூரி முதல்வர் முனைவர் வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர் தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக 'பாரதி' திரைப்பட இயக்குனர் ஞானராஜசேகரன் பங்கேற்று, "சரித்திர தேர்ச்சி கொள்" எனும் பொருண்மையின் மகாகவியின் ஒளியை மாணவர்கள் மனதில் விதைக்கிறார்.

இந்நிகழ்வில் பங்கேற்கும் அனைவரையும் தமிழ்த்துறை (மாலை நேரம்) அன்புடன் வரவேற்கிறது.

# இதுதான் திராவிடப் பொருளாதாரம்!



தொழிலாளர்கள் வசதியான வாழ்க்கை பெற்று அப்படியே தொழிலாளர்களாகவே இருக்க வேண்டும் என்று நினைப்பது கம்யூனிசம். முதலாளிகள் மிக மிக வசதியான வாழ்க்கையை பெற்று அப்படியே அனுபவிக்க வேண்டும் என்பது முதலாளித்துவம்.

**ஆனால் தொழில் தொடங்குவதற்கும் தொழில் செய்வதற்கும் ஒரு இணக்கமான சூழல் உருவாக்கி, தொழிலாளர்களையும் நலமாக வைத்து, அதன் பின்னர் அந்த தொழிலாளிகள் தொழில் தொடங்க தேவையான கட்டமைப்பை செய்து கொடுத்து இருப்பது திராவிடம்.**

எத்தனை நாட்கள் தான் அவர்களை தொழிலாளியாகவே வைத்திருப்பீர்கள்? தொழிலாளியாக இருந்து வாழ்வில் வளம் பெற்று அடுத்து அவர்கள் முதலாளியாக வேண்டும் என்பதுதான் திராவிட பொருளாதாரம்.

தென்மாநிலங்களை எடுத்துக் கொள்ளுங்கள். கேரளாவில் திறமையான டெக்னீசியன்கள் இருப்பார்கள். அவர்கள் சரியான நேரத்திற்கு வருவார்கள், திறமையாக வேலை செய்வார்கள், சரியான ஊதியம் பெறுவார்கள். அதனுடன் அவர்கள் அப்படியே இருந்து விடுவார்கள்.

ஆந்திரா பகுதிகளில் சொல்லவே வேண்டாம். அங்கே ஒருவர் அங்கே இருக்கும் ஜாதி கட்டுமானத்தை மீறி எல்லாம் முதலாளியாக மாறுவது என்பது மிக கடினம். கடைசிவரை தொழிலாளியாகவே இருப்பார்கள்.

ஆனால் தமிழ்நாட்டில் மட்டும்தான் டெக்னீசியன்களாக இருந்தாலும் சரி; ஹோட்டல் தொழில் செய்பவராக இருந்தாலும் சரி; வேறு எந்த மாதிரியான தொழிலிலும் உழைத்து திறமை கண்டவர்கள் முதலாளியாக மாற முடியும். அடையாறு ஆனந்த பவன் ஹோட்டல் அதிபரின் பேட்டியை இதற்கு ஒரு உதாரணமாக கூட எடுத்துக் கொள்ளலாம். அவர் சொல்லி இருப்பார் பெரியார் வந்த பின்னர் தான் எல்லா வகுப்பினரும் ஹோட்டல் தொழிலில் இறங்க முடிந்தது என்று. இதுபோக. கண் முன்னே ஆயிரக் கணக்கான உதாரணங்கள் கொட்டிக் கிடக்கின்றன.

**அம்பத்தூர் தொழில் பேட்டை துவங்கி ஓசூர், கோயமுத்தூர், கப்பலூர் சிட்கோ வரை ஏராளமான தொழிற்பேட்டைகளில் வேலை விஷயமாக சென்றிருக்கிறேன். அங்கே எல்லாம் தொழிலாளியாக இருந்து முதலாளியாக மாறிய ஏராளமான தொழில் முனைவோர்களை பார்த்திருக்கிறேன். அதற்கான பிளாட்பார்மை அமைத்துக் கொடுத்தது, இதுபோன்ற தொழில் பேட்டைகளை உருவாக்கிய கலைஞர் அவர்களின் திமுக தான். இதைத்தான் திராவிட பொருளாதாரம் என்கிறோம்.**

தொழிலாளியாக இருக்கும் வரை அவனுக்கு தேவையான வசதிகளை செய்து கொடு. அடுத்த கட்டமாக அவனை தொழில் முனைவோர் ஆக்கி, முதலாளி ஆக்கு என்பதுதான் திராவிட பொருளாதாரம். தொழில் செய்ய வருபவர்களை எல்லாம் அடித்து துரத்தி விட்டு கஞ்சித் தொட்டி திறப்பதை விட, அவர்கள் மூலம் வளர்ந்து நாம் அடுத்த கட்ட வளர்ச்சியை பெறுவதில் தான் கவனமாக இருக்க வேண்டும்.

அதைத்தான் திராவிட பொருளாதாரம் சொல்கிறது. தற்போது தமிழ்நாட்டிற்கு திராவிட மாடல் முதல்வர் அவர்கள் கொண்டு வரும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு எத்தனையோ சப் காண்ட்ராக்டர்கள் தேவை. அவர்களெல்லாம் வானத்தில் இருந்து குதித்தா வரப்போகிறார்கள்? எல்லாம் நம் மக்கள். இங்கே தொழிலாளர்களாக இருந்து தொழிலை கற்று அடுத்த நிலைக்கு முன்னேறியவர்கள். இன்று அவர்களும் ஒரு முதலாளிகள்.

**இதுதான் திராவிட பொருளாதாரம்.**

**பேராசிரியர் முரளிக்கண்ணன்**

